DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.S.C.No. 9/2017

PROSECUTION WITNESS No - PW- 23

| | | | |
|---|---|---|---|
| Name : | களஞ்சியம் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of November 2025.

1வது, 3வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் காரைக்குடி வடக்கு காவல்நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.07.2019-ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 22.05.2015ம் தேதி காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணியிலிருந்தபோது காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலைய குற்றஎண்.19/2015 பிரிவு 174 குவிமுச படி சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் என்பவர் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தும், அவர் சம்பவ இடம் சென்று பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தும், இறந்தவர் உடலின்மீது பிரேதவிசாரணை செய்தும் பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தும் மருத்துவரிடம் பிரேதபரிசோதனை வேண்டுகோள் கடிதம் கொடுத்தும், சாட்சிகளை விசாரித்தும் வைத்திருந்த நிலையில் வழக்குகோப்பை பெற்று கடந்த 25.05.2015ம் தேதி இவ்வழக்கில் இறந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரின் தாயார் சிங்கம்மாள் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார்மனுவினை பெற்று இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர் சாட்சிகள் சிங்கம்மாள், பவித்ரா, அபிராமி ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலங்கள் பதிவுசெய்தேன். பின்னர் குற்றஎண். 19/2015 குவிமுச 174ன் படியான வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 120(b), 449, 302, 201, 342 r/w 34 IPC ன் படி பிரிவுமாறுதல் அறிக்கை தயார் செய்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி பிரிவுமாறுதல்அறிக்கை **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட முதலில் தயாரித்த குவிமுச 174ன் படியான அறிக்கை மற்றும் வட்டாட்சியரிடமிருந்த ஆவணங்களை பெற்று நீதிமன்றத்திற்கு

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.07 10:13:30 +0530

அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் சிங்கம்மாள், பவித்ரா, அபிராமி ஆகியோர்களை பிரிவு 164 குவிமுச படி வாக்குமூலம் பெறுவதற்கு வேண்டுகோள் கடிதம் பெற்றேன். மேற்படி வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் தலைமைக்குற்றவியல் நீதிபதி அவர்களால் வாங்கப்பட்ட செயல்முறைக்கடிதம் **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க விருப்பப்பட்ட சிங்கம்மாள், பவித்ரா, அபிராமி ஆகியோர்கள் கடந்த 04.06.2015ல் திருப்பத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் தனித்தனியாக கொடுத்த பிரிவு 164 குவிமுச படியான வாக்குமூலங்கள் முறையே **அ.சா.ஆ.21, 22, 23** வரையாக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.05.2019 அன்று தே.காட்டூர் ஊராட்சிமன்ற தலைவர் கொடுத்த அறிக்கையுடன் கூடிய வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பெற்று வழக்குகோப்பில் சேர்த்தேன். மேற்படி ஊராட்சிமன்ற தலைவரிடம் 3வது எதிரியான வசந்தி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை அறிக்கையாக சமர்பித்தார் மேற்படி அறிக்கை **அ.சா.ஆ. 24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கின் எதிரி வசந்தி என்பவரை கைது செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தனியாக பெற்றேன். பின்னர் எதிரி வசந்தியுடன் சம்பவ இடமான நமணசமுத்திரம் இறந்த நபரின் வீட்டிற்கு சென்று சம்பவ இடத்தை பகல் 12.00 மணிக்கு பார்வையிட்டு மாதிரிவரைபடம் தயார் செய்தேன். மேற்படி மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகஜரின் சாட்சிகளாக லூர்துசாமி மற்றும் ரங்கசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரி வசந்தி பகல் 1.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து வெள்ளை உறையுடன் கூடிய தலையணை, சிவப்புநிற அரைக்கை சட்டை, நான்குமுழ வேஷ்டி, கருப்புக்கலர் துப்பட்டா ஆகியவற்றை ஒப்படைத்ததன் பேரில் கைப்பற்றி உரிய அத்தாட்சி மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேலும் கடந்த 23.05.2015 அன்றே இவ்வழக்கில் இறந்த கிருஷ்ண மூர்த்தி என்பவரின் உடலை பிரேதபரிசோதனை செய்த மருத்துவர் கண்ணன் என்பவரிடம் பிரேதம் இறந்ததற்கான காரணம் அறியும் பொருட்டு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் வழக்கின் சாட்சிகள் சந்திரகோபாலன், ஆறுமுகம், சிதம்பரம், ராஜ்குமார், லூர்துசாமி, ரங்கசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்கமூலம் பதிவு செய்தேன். மேலும் 24.05.2015ம் தேதி சாட்சிகள் செந்தில்குமார், சிதம்பரம், கருப்பையா, ஆறுமுகம், நீலகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.05.2015ம் தேதி காலை 9.00 மணிக்கு எனக்கு கிடைத்த தகவலின் படி காரைக்குடி புதிய பேருந்துநிலையம் அருகில் இவ்வழக்கின் எதிரி இளவர்.அன்புக்கரசி என்பவரை பெண் காவலர் மூலம் கைது செய்து நிலையம் கொண்டுவந்து அவர் இளவர் என்பவதால்

சிவகங்கை இளவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் 26.05.2015ம் தேதி மதியம் 2.30 மணியளவில் காரைக்குடி தாலுகா இழுப்பங்குடி குரூப் கிராமநிர்வாக அலுவலர் சரவணன் என்பவர் தானும் கிராமஉதவியாளரும் பணியிலிருந்த போது ராஜா என்ற பாரதிராஜா என்ற எதிரி தன்னிடம் கொடுத்த தனிநபர் ஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்து மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்தை எதிரியுடன் என்னிடம் ஒப்படைத்தார். மேற்படி தனிநபர் ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்குறிப்பிட்ட எதிரியிடம் உரிய வாக்குமூலம் பெற்றநிலையில் அவர் சம்பவ இடத்திற்கு அழைத்துச்சென்று இவ்வழக்கில் இறந்தநபரை சம்பவ இடமான வீட்டிலிருந்து ரயில்வே பாதையில் தூக்கிச்சென்ற மரபெஞ்ச் என்று காட்டி ஒரு பெஞ்சை ஒப்படைத்தார். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் அருள்ராஜ், சரவணன், நடராஜன், சுப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 26.05.2015 அன்று இவ்வழக்கின் 1வது எதிரி வீரசோழன் என்பவர் இந்த வழக்கில் திருத்துரைபூண்டி நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில் கடந்த 29.05.2015 அன்று அவர் காரைக்குடி நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் அவரை காவல்எடுப்பில் எடுப்பதற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன்அடிப்படையில் 02.06.2015ல் உரிய உத்தரவின் மூலம் அவரை காவல் எடுப்பில் பெற்று அன்றே அவரிடம் ஒப்புதல்வாக்குமூலம் பெற்றேன். அதில் அவர் சம்பவ இடத்தில் இருந்து எடுத்து ஒப்படைத்த சுமார் 73 செமீ நீளமுள்ள லேசாக வளைந்த இரும்புராடு கம்பியை அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் 06.07.2015ல் சாட்சிகள் சரவணன், லீன்விஸ், காவலர் ராஜா, சிறப்புசார்புஆய்வாளர் கணேசன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் திருமயம் அரசுமருத்துவர் கண்ணன் என்பவரிடம் இறந்தவரின் இறப்புக்காண காரணங்களை விளக்கங்கள் கூறி விவரமாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் சாட்சிகள் மாணிக்கம், ராஜ்குமார், செல்வராஜ், மிதுன், டேவிட்குமார், இளங்கோவன், வள்ளியப்பன், அருகுலிங்கம், அய்யாகண்ணு, அருமைக்கண்ணு, நல்லதம்பி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றிய சா.பொ.1 முதல் சா.பொ.6 வரையிலான பொருட்களை படிவம் 91 மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி படிவம் 91 முறையே **அ.சா.ஆ.27, அ.சா.ஆ.28, அ.சா.ஆ.29** வரையாக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் விசாரணையை 30.07.2015 அன்று முடித்து 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(b), 449, 302, 201 ன் படியும், 2-வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(b), 449, 302, 201, 342 ன் படியும், 3-வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(b), 302, 201, 203, r/w 34 IPC ன் படியும், இளவர் எதிரி மீது இதச பிரிவுகள்

120(b), 302, r/w 34 IPC ன் படியும், மேற்குறிப்பிட்ட எதிரிகளில் இளவர் எதிரி மீதான குற்றஅறிக்கையை இளவர் நீதிமன்றத்திலும் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் பவித்ரா, சிதம்பரம், வள்ளியப்பன், ஆறுமுகம், சுப்பையா, இளங்கோவன் ஆகியோர்கள் சொன்ன செய்திகளையே வாக்குமூலங்களாக பதிவு செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கையின்படி இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி காலைக்கடன் கழிக்க சென்றபோது எதோ ஒரு ரயிலில் அடிபட்டு இறந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் புலன்விசாரணை செய்த சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் விசாரித்து சேகரித்த ஆவணங்களை பார்வையிட்டு பரிசீலனை செய்தேன் என்றால் சரிதான். இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி குடியிருந்த வீடு மற்றும் நடத்தி வந்த கடைக்கு எதிர்புரம் நமணசமுத்திரம் காவல்நிலையம் இருந்ததாக மாதிரிவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடத்தில் கடைக்கு வடக்குப்பக்கம் வீடுகள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் விசாரணையில் 26.02.2015ம் தேதி சாட்சி அபிராமி அதிகாலை 4.00 மணியளவில் காலைக்கடன் கழிக்க சென்ற இறந்துபோன தனது அப்பா 7.00 மணிவரை திரும்பாததால் தான் அவரை தேடிச்சென்று தனது தாயாருடன் பார்த்தபோது ரயில் தண்டவாளத்தில் அடிபட்டு கிடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேலும் சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் விசாரணையில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாமல் அவ்வப்போது சத்தம் போடுவார், மேலும் தலைவலி என்று அடிக்கடி மாத்திரை சாப்பிடுவார் என்று சாட்சி அசா.7 கருப்பையா சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் என்பவரது விசாரணையில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்பவரது தம்பியான சாட்சி அசா.5 ராஜ்குமார் என்பவர் சாட்சியத்தில் பிரேதபரிசோதனை முடித்து நல்லடக்கத்திற்காக அவரது சொந்த ஊரான ஒரத்தநாடு ஊரணிபுரம் கிராமத்திற்கு எடுத்துச்சென்று எரியூட்டியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் விசாரணையில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி அடிக்கடி மனநிலை சரியில்லாதவர்போல் சத்தம்போடுவார் என்று சாட்சி நீலகண்டன் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சிறப்பு சார்புஆய்வாளர் கணேசன் விசாரணையில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் தகப்பனார் அசா.6 சிதம்பரம், மற்றும் தாயார் அசா.1 சிங்கம்மாள் ஆகியோர்கள் ஆண்வாரிசு இல்லாததால் கிருஷ்ணமூர்த்தியின் மனைவியின் ஒப்புதலுடன் தங்கள்

சொந்த ஊருக்கு உடலை எடுத்துச் செல்வதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அசா.1 சிங்கம்மாள் கொடுத்ததாக சொல்லப்படும் அசா.ஆ.1 புகார் கணிணியால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அசா.ஆ.1 புகாரில் முதல்பக்கத்திலும் இரண்டாவது பக்கத்தில் உள்ள கையெழுத்துக்கு கீழ் தேதி எழுதப்படவில்லை என்றால் சரிதான். அசா.2.அபிராமியை 11.07.2015ல் நான் மறுவிசாரணை செய்தேன் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் 1வது எதிரி குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் மீண்டும் ஒரு வாக்குமூலம் பெற்றதில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். அசா.ஆ.21, அசா.ஆ.22, அசா.ஆ.23 ஆகிய வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் கொடுத்தவை என் அறிவுறுத்தலின்பேரில் சாட்சிகளால் சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல. அசாஆ.24-ன் படி சொல்லப்பட்ட 23.05.2015ம் தேதி தே.காட்டூர் ஊராட்சிமன்ற தலைவர் 3வது எதிரி வசந்தியை ஆஜர்படுத்தி எந்த அறிக்கையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அறிக்கை இவ்வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3வது எதிரி வசந்தி எந்த ஒப்புதல்வாக்குமூலமும் சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றும் அது வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அசா.ஆ.26ன் படி சொல்லப்பட்ட 26.05.2015ம் தேதி சாட்சி அருள்ராஜ் மற்றும் கிராமஉதவியாளர் முன்னிலையில் 2வது எதிரி ராஜா(எ)பாரதிராஜா என்பவர் எந்த வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்றும் அது வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதன்படி சான்றுப்பொருட்கள் எதுவும் சொன்ன நேரத்தில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 02.06.2015 அன்று 1வது எதிரியை காவலில் எடுத்தபோது அவர் எந்தவித ஒப்புதல்வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் விசாரணை செய்த அசா.21 மருத்தவர் கண்ணன் என்பவர் என் விசாரணையில் நான் கேட்ட கேள்விகளுக்கு நான்காவது பதிலாக காயங்களின் தன்மை இறப்பிற்கு முன் அல்லது இறப்பிற்கு பின் ஏற்பட்டதை வேறுபடுத்த முடியவில்லை என்று மறுபிரேதபரிசோதனை கருத்துரை வழங்கப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். படிவம் 91ல் குறிப்பிடப்பட்டுள்ள அசா.ஆ.27, அசா.ஆ.28-ல் சில இடங்களில் Whitner போட்டு அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி ரயிலில் அடிபட்டுதான் இறந்துவிட்டார் என்பது எனது புலன்விசாரணையில் தெரியவந்தது என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி இறப்பிற்கு பின்பு அவரது குடும்பத்திற்கும் 3வது எதிரிக்கும்

உள்ள கருத்து வேறுபாட்டை பயன்படுத்தி இவ்வழக்கு பின்யோசனையின் பேரில் பழிவாங்கும் நோக்கத்துடன் அசா.1ஆல் என்னிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றும் அதற்கு ஆதரவாக இவ்வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் சான்றுப்பொருட்களும் இவ்வழக்கிற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.07 10:13:41 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை